Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 332/2007**

**Deposition of witness for: PW - 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மலையாண்டி | **Father/Husband Name** | : | மலையாண்டி |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **16.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் சொக்கலிங்கபுரத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்கிறேன். எதிரி ரெங்கராஜன் என்ற பெயர் தெரியும், ரெங்கராஜனை நான் இதுநாள்வரை பார்த்ததில்லை. அசா1 ஆறுமுகத்தை தெரியும், அசா 1 முதல் அசா4 எனக்கு தெரியும், பட்டியல் சாட்சி 4 சொக்கலிங்கம் எனக்கு தெரியும், அவர் இறந்துவிட்டார். அசா1 ஆறுமுகம் எதிரி ரங்கராஜன் ஓர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக சொல்லி ரூ.37000/-யை ஆஜர் எதிரி ரெங்கராஜனிடம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். ( சாட்சி ஆஜர் எதிரி ரங்கராஜனை காட்டி சாட்சியம் அளித்தார் ). அப்போது நானும், பட்டியல் சாட்சி 4 சொக்கலிங்கமும் சேர்ந்து ஆறுமுகத்திடம் நீங்கள் ரங்கராஜனிடம் கொடுத்த பணத்திற்கு எழுதி வாங்கிகொள்ளுங்கள் என்று சொன்னோம். பின்னர் எதிரி ரங்கராஜன் 4, 5 மாதங்களாக அவரை காணவில்லை. ஆனால் எதிரி ரங்கராஜன் சொன்னபடி நீதிமன்றத்தில் வேலை வாங்கி கொடுக்கவில்லை என்ற விவரத்தை

தெரிந்துகொண்டேன். அதேபோல் எதிரி ரங்கராஜன் ஆறுமுகத்திடமிருந்து வேலை வாங்கி தருவதாக பெற்ற ரூ.37000/-யை திருப்பி செலுத்தவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும். போலீசார் இதுசம்மந்தமாக விசாரிக்க நடந்த விவரத்தை சொன்னேன்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

ஆண்டி மகன் ஆறுமுகம், சொக்கலிங்கம், செல்லகண்னு தெரியுமா என்றால் தெரியும், அவர்கள் மைத்துனர் மகன் ஆவார்கள். இவ்வழக்கில் ஆறுமுகத்தை எதிரி ஏமாற்றிவிட்டதாக என்னை சாட்சியாக போட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான், யார் என்னை சாட்சியாக போட்டதை சொன்னார்கள் என்றால் கணேசன் மற்றும் சொக்கலிங்கம். நீதிமன்றத்திற்கு சாட்சியம் சொல்ல அழைத்து வந்தது யார் என்றால் ஆறுமுகம் அழைத்து வந்தார். நீதிமன்ற அழைப்பாணையை பெற்று வந்தேன். பணம் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும், பட்டியல் சாட்சி 4 சொக்கலிங்கத்தின் கடையில் வைத்து ஆறுமுகம், ரங்கராஜனிடம் பணத்தை கொடுத்தார். எந்த தேதியில் பணம் கொடுத்தார்கள் என்று தெரியாது என்றால் சரிதான்.

2) பட்டியல் சாட்சி 8 முத்தையா பூசாரி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆறுமுகம் ரூ.37000/-யை ரங்கராஜனிடம் கொடுத்தாரா அல்லது முத்தையா பூசாரியிடம் கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அசா1 ஆறுமுகத்திற்கு முத்தையா பூசாரி யார் மூலம் அறிமுகம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அசா1னிடம் பணத்தை பெற்றுக்கொண்டு எதிரி திருப்பி தரவில்லை என்று நானும், மற்ற சாட்சிகளும் அசா1 உடன் கொட்டாம்பட்டி காவல் நிலையத்திற்கு புகார் சென்றோமா என்றால் நான் காவல் நிலையம்

செல்லவில்லை, கணேசன், சொக்கலிங்கம் அவர்கள்தான் சென்றார்கள். கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் பணத்தை திருப்பி கொடுக்க சொல்லி எதிரி ரங்கராஜனிடம் எழுதி வாங்கிகொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

3) எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது, அசா1, அசா2, அசா3 ஆகியோர்கள் உறவினர்கள் என்பதாலும், அசா1 ஆறுமுகம் கேட்டுகொண்டதற்காக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்தையாபூசாரிதான் ஆறுமுகத்திடம் தனக்கு தெரிந்தவர் மூலம் வேலை வாங்கிதருவதாக சொல்லி பணத்தை பெற்றுகொண்டு ஏமாற்றிவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. எதிரி ரங்கராஜன் அரசு ஊழியர் என்பதால் அவரிடமிருந்து பணத்தை கைப்பற்ற வேண்டும் என்று எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து, அதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை தனியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல விசாரித்தார்கள்.